# கவிக்கோ அப்துல் ரகுமானின் கவிதைகளில் அரசியல் நிலையும் மக்களின் வலியும்

முனைவர் மு. நாகபாண்டி
இராமநாதபுரம்,

**முன்னுரை**

ஒரு நாட்டின் முதுகெலும்பாக இருப்பது அரசியல். அதனை வைத்துத்தான் ஒவ்வொரு இயங்குதலும் செயல்பட முடியும். இந்த இயங்குதல் பழுதுபட்டாலோ அல்லது நேர்த்தியாகச் செயல்பட முடியாவிட்டாலோ நாட்டின் வளர்ச்சி முற்றிலும் தடைப்பட்டுவிடும். அதில் நமது நாட்டில் சமகாலத்தில் நடக்கும் அரசியல் அவலங்களும், மக்களின் எதிர்பார்ப்புகளும், நிறை வேற்றப்படாமல் இருக்கும் செயற்பாடுகளும், எதிர்த்துக் கேட்கமுடியாத மக்களின் குமுறல்களும், கேடான அரசியலுக்கு ஒத்திசைக்கும் ஊடகங்களும், என்ன நடக்கிறது என்றே தெரியாத பாமர மக்களும் தான் சமகாலக் கவிஞர்களுக்குப் பாடுபொருளாகிப் போனவர்கள். அரசியல் தளம் எப்போதும் வெற்றிடமாக இருப்பதையும், மக்களின் குரல்கள் வெளியில் கேட்காதவாறு நசுக்கப்படுவதையும் பார்த்த கவிஞர்கள் தம்படைப்புகளை அதை நோக்கி நகர்த்தத் துவங்கினர். அந்த வரிசையில் மக்களின் எண்ணங்களையும், அரசியல்வாதிகளின் செயல்பாடுகளையும் துணிச்சலுடனும், மிகநேர்த்தியாகவும், நாட்டின் நலன் காப்பாற்றப்பட வேண்டும் என்ற அக்கறையுடன் கவிதைகளைப் படைத்தவர்தான் கவிக்கோ அப்துல்ரகுமான். இவர் கவிதைகளில் அரசியல் நிலையையும், அரசியல் செய்யக்கூடியவர்களின் நிலையையும், மக்களின் வலியையும் வெளிக்கொணர்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

**அரசியல்**

அரசியல் என்பது அரசை நடத்துபவன் ஆற்றுப்படுத்துபவனாகவும், பக்குவப்பட்டவனாகவும், நாட்டையும் நாட்டுமக்களையும் பெரிதும் நேசிக்கக் கூடியனவாகவும் இருக்கவேண்டும். இதைத்தான் “மன்னன் எவ்வழி மக்கள் அவ்வழி” என்பர் நம்முன்னோர். “அரசியலானது அரசின் இயல்பு, அரசாங்கத்தின் இயல்பு முதலியவற்றின் உண்மையைக் கூறுவதாகும். ஒரு சமுதாயம் நிலைபெறுவது அதன் அரசையும், அரசாங்கத்தையும் பொறுத்திருப்பதால் அரசியலே முதன்மையான அறிவுப் பகுதி” என்கிறார் அரிஸ்டாட்டில். (**கலைக்களஞ்சியம் (தொகுதி-1), ப.155**)

அரசியலுக்கென்று சில உரிமைகள் இருக்கின்றன. ஆனால் அதைப் பயன்படுத்த முடியாத நிலையும், மக்களின் அறியாமையும்தான் நிறைந்து கிடக்கிறது. “அரசியல் உரிமைகள் பலவகைப்படும் அவை வாக்களிக்கும் உரிமை, தேர்தலில் போட்டியிடும் உரிமை, நிர்வாகம் செய்யும் உரிமை, புகார் மனுத்தாக்கல் செய்யும் உரிமை, அரசை விமர்சிக்கும் உரிமை என்பன குறிப்பிடத்தக்கனவாகும்” **(சிவகாமி பரமசிவம்., மனிதஉரிமைகள், ப.63)**இவ்வளவு உரிமைகள் இருந்தும் அவற்றைச் செயல்படுத்த துணிவில்லை. காரணம் அரசியல்வாதிகளின் மறைமுகமான அடக்குமுறைகள் மக்களை அச்சுறுத்தி வரும் போக்கு எனலாம்.

“தனி மனிதனின் பேராசையினாலும், அறிவு குறைந்த செயல்களினாலும், விளைகின்ற விளைவுகள் அவனுக்கோ மற்றவர்களுக்கோ துன்பம் விளைவிக்குமேயானால் அதைக் குற்றம் என்று கூறி, அத்தகைய தனிமனிதன் திருத்திக் கொள்ளுமாறு தண்டனை அளித்து, எல்லா மக்களும் அமைதியோடும் இனிமையோடும் வாழ ஏற்ற சமுதாயத் தொண்டாற்றுகின்ற சிறந்த நிறுவனமே அரசியல் என்னும் ஆட்சிமுறை. இவ்வாறு மக்களைத் திருத்திப் பாதுகாப்பளித்து, வாழ இயலாதவர்களுக்கும், வாழத்தெரிந்தவர்களுக்கும் வாழ்வளித்துக் காக்கின்ற நிறுவனமானது மிகவும் துல்லியமாகப் பிறர் நலம் காக்கின்ற எண்ணமும் தொண்டும் உள்ளவர்கள் செயலாற்றுகின்ற நிறுவனமாக அமைய வேண்டும். இத்தகைய உயர்ந்த பொதுநல நிறுவனம் இக்காலத்தில் அதன் தூய்மையும் மேன்மையும் அறியாதவர்கள் பலரால் கையாளப்பட்டுத் தனது சிறப்பையும்

மேன்மையையும் இழந்து கொண்டிருக்கிறது" **(வேதாத்திரி மகரிஷி., ஆன்மீக விளக்கு, பக்.113-114)**வேதாத்திரியின் இக்கருத்து இன்றைய அரசியல் நடப்பியலைச் சுட்டிக் காட்டுவதாக அமைகின்றது.

**இலக்கியங்களில் அரசியல்**

ஆரம்ப காலகட்டத்தில் பல்வேறு இடங்களில் அலைந்து திரிந்த மனிதன் ஓரிடத்தில் வாழத்தலைப்பட்டான். நாளிடைவில் மனிதர்கள் சேர்ந்து குழுவாக அல்லது கூட்டமாக வாழ ஆரம்பித்தனர். பின்னர் அக்கூட்டத்தை வழி நடத்திச்செல்ல தலைவனைத் தேர்ந்தெடுத்தனர். அத்தலைவனைக் கடவுளுக்கு நிகராக மக்கள் கருதினர். இதனை

**"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு**

**இறை என்று வைக்கப்படும்"** (**குறள் எண்.388)** என்ற குறள்வழி அறிய முடிகிறது.

அன்றைய மன்னராட்சியில் கடமை ஒன்றையே முழுமுதற் மூச்சாகக் கொண்டிருந்தனர். எனவே, செல்வமும் குறையில்லா வாழ்வும் மக்களுக்குக் கிட்டியது. இதனால் மக்கள் எல்லா நிலைகளிலும் மேன்மையடைந்திருந்தனர்.

**"அறநிலை முதற்றே அரசின் கொற்றம்" (புறநானூறு, பா.வரி.55)**

**"மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன் தன்னுயிர்"(மணிமேகலை, பா.வரி.710-12)**

என்ற இலக்கிய வரிகள் அரசியலின் மேன்மைத் தன்மைகளைச் சுட்டுகின்றன. இத்தகைய 'மக்கள் தொண்டே மகேசன் தொண்டு' என்ற நிலை அன்று நிலவியது.

**புதுக்கவிதையும் அரசியலும்**

"தமிழ்க் கவிதையுலகில் ஒரு பரபரப்பையும், மந்த நிலையை மாற்றிடும் புது வேகத்தையும் புதுக்கவிதைகள் உண்டாக்கியுள்ளன. கவிதை இயற்றவும், கவிதையை அனைவரும் விரும்பிப் படிக்கவுமான ஒரு மறுமலர்ச்சியை இவை தோற்றுவித்துள்ளன. இதனை ஓர் அதிர்ச்சி வைத்தியம் என்ற அளவிலேயே தமிழகம் ஏற்றுக்கொண்டிருப்பதாகக் கூறலாம். எனினும் அதன் எதிர்காலம் அதனிடத்தில் உள்ளது" **(தமிழ்குடிமகன்.மு.பத்தாண்டுத்தமிழ்க் கவிதைகள், ப.28)**

மக்களின் வாழ்க்கை நிலைக்கு அரசியல் ஓர் ஆதாரமாக இருந்து வருகிறது. அப்படி இருக்கும் அரசியல் முறையற்ற செயல்பாடுகளைச் செய்யும்போது கவிஞர்கள் அதன் நிறை குறைகளைச் சுட்டிக்காட்டத் தயங்கியதில்லை. அது தொடர்பான கருத்துக்களை ஒவ்வொரு நிலைகளையும் தம் கவிதையில் படைத்துள்ளார்.

**அரசியல் தளம்**

அரசியல் தளத்தில் கட்சியும், கட்சிக்கொடியும், கொடிக்கம்பங்களும், பேச்சுகளும், திட்டங்களும், பதவி மோகமும், சுயநலப் போக்கில் மனிதநேயம் மறந்து தன் வாழ்வு மட்டுமே சிறக்க எத்தனிக்கிற போது அரசியல்தளம் வெற்றிடமாகவே காணப்படுகிறது. இதில் அரசியலின் நிலையைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1. **கட்சிக்கொடி**

அரசியல் கட்சிகள் தங்களின் கட்சி அடையாளத்திற்காகவும் என்றும் நிலைத்து நிற்க வேண்டும் என்பதற்காகவும் கட்சிக்கொடியை அமைத்துள்ளனர். அதற்காக அதிகமாக செலவும் செய்கின்றனர். ஆனால் தொண்டர்களிடமோ நாட்டுமக்களிடமோ மானத்தை மறைக்கக்கூட துணி இல்லாத நிலையை யாரும் கண்டுகொள்வதில்லை. இதைக் கவிஞர்,

**"கம்பங்களுக்கு ஆடை; மனிதர்களுக்கு நிர்வாணம்**

**விசித்திரமான தேசம்" (அப்துல் ரகுமான்., சுட்டுவிரல், ப.16)**

என்கிறார். கொடிக்கம்பங்களைப்பார்த்து.

**"மலர் மரங்கள் ; பிடுங்கப்பட்ட இடங்களில்**

**இப்போது இந்த ; மலட்டு மரங்கள்" (அப்துல் ரகுமான்., சுட்டுவிரல், ப.14)**

இதில் கொடிக்கம்பங்களால் மக்களுக்கு எந்தப்பயனும் கிடைக்கப் பெறவில்லை என்பதை ஆதங்கத்துடன் வெளிப்படுத்துகிறார்.

**2. பொய்யான வாக்குறுதியும் பேச்சும்**

அரசியல்வாதிகள் தாமும், தாம் சார்ந்த கட்சியும் வெற்றிபெற வேண்டும் என்பதற்காக, கற்பனை கலந்து செய்யமுடியாதவற்றையும், நடைமுறைச் சாத்தியமற்றதையும், கவர்ச்சியான தம் வசீகரப் பேச்சினால் மக்களை ஏமாற்றுகின்றனர். மக்களைக் கவர்ந்து இழுக்கின்ற தன்மையிலும், இனம், மொழி, சாதி, சமய உணர்விலும் மக்களை ஈர்க்கின்றனர். எல்லாவற்றையும்விட சாதியைச் சொல்லி ஓட்டுக் கேட்பதையும், தாம் எல்லாவற்றையும் செய்து தருகிறேன் என்று சொல்லி ஏமாற்றுவதையும் கவிஞர்.

**"உங்கள் வார்த்தைகளில் ; இடிமட்டும்தான்**
**இருக்கிறது ; மின்சாரம் இல்லை**
**மழையும் இல்லை ; சப்தத்திற்குப் ;**
**பசியெடுக்கும்போது**
**அது அர்த்தத்தை தின்று விடுகிறது" (அப்துல் ரகுமான்., பித்தன், ப.84)**

என்று அழகாகக் கூறுகிறார். இவர்களைத் திருத்தமுடியாது என்று உணர்ந்த பெரியார்.

"அரசியல் வாழ்க்கையில் மக்களுக்கு மிகுந்த ஈடுபாடு வரவேண்டும். நல்ல ஆட்கள் பதவிக்கு வரமுடியவில்லை என்றால், பதவிக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பும் ஓட்டர்களுக்குப் புத்தியில்லை. அல்லது புத்தியுள்ள மக்களுக்கு ஓட்டுரிமை இல்லை என்றுதானே அர்த்தம்"**(தந்தைப் பெரியார்., பொன்மொழிகள், ப.8)**என்று மக்களைச் சிந்திக்க வைக்கிறார். அரசியல்வாதிகள் அணிந்திருக்கும் துண்டின் நீளத்தைவிட அவர்கள் நாக்கின் நீளம் அதிகம் என்பார் கவிஞர் கண்ணதாசன். அது போலவேதான் இவர்களின் பேச்சுப் பொருத்தமாக அமைகிறது. அதிகாரத்தில் இருந்து கொண்டு எதைப் பேசினாலும் அதை ஏற்றுக்கொள்ள ஓர் அடிமைக் கூட்டம் இருக்கிறது என்பதைக் கவிஞர்,

**"நாற்காலியில் உட்கார்ந்தால் ; தெய்வமாகி விடலாம்**
**உளறலும் ; வேதமாகிவிடும்" (அப்துல் ரகுமான்., சுட்டுவிரல், ப.45)** என்கிறார்.

**3. அரசியல்வாதிகளின் திட்டம்.**

அரசியல் வாதிகளின் திட்டம் நாட்டுக்கு தொலைநோக்குத் திட்டமாக இருக்க வேண்டும். மக்களைக் காப்பாற்றுவதாக அமையவேண்டும். துன்புறுத்துவதாக அமையக்கூடாது.

ஆனால் அவ்வாறு அமைவதில்லை. உயரே வாருங்கள் என்று அறைகூவல் மட்டும் விடுவார்களே தவிர நடைமுறையில் அவ்வாறு நடந்துகொள்வதில்லை என்பதை

**"நாற்காலியின் கால்களுக்கு ; நடக்கத் தெரியாது**
**மிதிக்கத் தெரியும்" (அப்துல் ரகுமான்., சுட்டுவிரல், ப.45)**

இதில் அதிகாரம் எவ்வளவு வலிமையானது. அது பாமரமக்களை எந்த அளவிற்குக் கொடுமைப்படுத்துகிறது என்பதை அறியமுடிகிறது.

**4. சுரண்டல் போக்கு**

கறை படாத கரங்களுக்குச் சொந்தக்காரர்கள் என்றவகையில் நேர்மையானவர்களாக இருக்க வேண்டும். குறைந்த வரிவசூல் செய்தாலும் நாட்டு மக்களுக்கு நிறைவான செயல்திட்டம் தீட்ட வேண்டும். ஆனால் இன்றைய நிலையில் அரசியல் தலைவர்கள் அப்படி இல்லை என்பதை,

**"அன்னையின் தனங்களில் ; அட்டைகளைக் குடிவைத்த**
**புத்திரர் நாம்" (அப்துல் ரகுமான்., நேயர் விருப்பம், ப.49)**

என்கிறார். தாயின் தனங்களில் பால் அருந்துவது இயற்கை. ஆனால் இரத்தம் குடிப்பது எவ்வளவு கொடுமையானது என்பதைப் புலப்படுத்துகிறார்.

**5. பிரிவினையைத் தூண்டுதல்**

மக்கள் ஒற்றுமையாக இருந்தால் தாம் நினைத்தபடி ஆட்சிசெய்ய முடியாது. என்பதை உணர்ந்த அரசியல்வாதிகள் சாதியின் பெயராலோ, மதத்தின் பெயராலோ ஒற்றுமையைச் சிதைத்து, மக்களைப் பிளவுபடுத்தி தம் எண்ணம் போல் வாழ்கின்றனர் என்பதைக் கவிஞர்,

**சிதறிக் கிடக்கும் உங்களை ; யார்யாரோ பொறுக்கிச்**
**சாப்பிடுகிறார்கள் (அப்துல் ரகுமான்., பித்தன், ப.42)**

என்று சொல்லுகின்றபோது மக்கள் எளிதாக உணர்ச்சிவயப்படக் கூடியவர்கள் என்பதையும் அரசியல் செய்பவர்கள் புரிந்து வைத்திருப்பதையும் பிரிந்து கிடப்பவர்கள் ஒற்றுமையாக வேண்டும் என்ற உயரிய கவிஞரின் எண்ணத்தையும் பார்க்கமுடிகிறது.

**6. கட்சித் தாவுதல்**

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் சுயம் என்பது மறைத்து வைக்கப்பட்டிருக்கிறது. அது தேவைக் கேற்பவும், சூழலுக்கேற்பவும் கண்ணுக்கு முன்னால் காட்சியளிக்கிறது. கொள்கைக்காக கட்சி நடத்தி மாறாத நிலையில் இருந்த காலம் தற்போது மாறிவிட்டது. இன்றைய சூழ்நிலையில் பணம் அன்றாட வாழ்க்கையில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. 'பணம் இருந்தால் பிணம் கூட வாய் திறக்கும்' என்பார்கள். அதைப்போல் பணம் எந்தக் கட்சியில் அதிகம் தருகிறார்களோ அந்தக் கட்சிக்கு மாறிவிடுகிறார்கள். இதைக் கட்சித்தாவுதல் என்பர். இந்த நிலையைப் பார்த்த கவிஞர் அரசியல் வாதிகளை ஈக்கள் என்று குறியீடாகப் பயன்படுத்துகிறார். அரசியலை ஈநாடு என்று அமைத்து அதில் அரசியல் செயல்பாட்டை விரிவாகக் கூறுகிறார்.

**"ஈக்களுக்கு கழிவுகள் என்றால் ரொம்பப் பிடிக்கும்**
**கழிவுகள் தங்கள் நாற்றத்தால் ஈக்களைக்**
**கவர்ந்து இழுக்கும் ; எந்தக் கழிவில் நாற்றம் அதிகமோ**
**அந்தக் கழிவில் ஈக்கள் அதிகமாக மொய்க்கும்" (அப்துல் ரகுமான்., சுட்டுவிரல், ப.54)**

கவிஞர் பணம் நிறையக் கிடைக்கக்கூடிய நிலையை நாற்றம் அதிகம் என்கிறார். அவ்வாறு அதிக நாற்றம் இருக்கின்ற இடத்தில் ஈக்கள் மொய்ப்பதைப் போன்று அரசியல்வாதிகள் அக்கட்சிக்குச் செல்வார்கள் என்கிறார். சில அரசியல்வாதிகளுக்கு எந்தக் கட்சியில் ஆதாயம் இருக்கிறது என்று தெரியாத நிலையைக் கவிஞர் சலன புத்தியுடைய ஈக்கள் என்கிறார்.

**"சில ஈக்களுக்கு சலனபுத்தி ஆதாயம் எதில்**
**என்று தீர்மானிக்க முடியாமல் இந்தக் கழிவுக்கும்**
**அந்தக் கழிவுக்கும் தாவிக் கொண்டிருக்கும்" (அப்துல் ரகுமான்., சுட்டுவிரல், ப.55)**

இக்கவிதை வரிகளால் கட்சித்தாவுதலின் அவலநிலையை அறியமுடிகிறது.

**தொண்டர்களின் செயல்பாடு**

அரசியல்வாதிகளுக்கு அனைத்து வேலைகளையும் செய்து கொடுப்பவர்கள் தொண்டர்கள். இவர்களை வைத்துத்தான் அரசியல்வாதிகள் வசதி படைத்தவர்களாக மாறுகிறார்கள். இவர்களின் உழைப்பைப் பின்வருமாறு கூறுகிறார்.

**"வேர்விடாத இவற்றுக்கு ; வேர்வைப் பூவாளிகள் தாம்**
**எத்தனை?" (அப்துல் ரகுமான்., பால்வீதி, ப.91)**

என்று சொல்கின்றபோது தொண்டர்களின் உழைப்பு வெளிப்படுகிறது. தவிர பயனற்ற தலைவர்களின் செயல்பாட்டையும் காணமுடிகிறது.

**வாக்குப்பெட்டி – வாக்குச்சீட்டு**

தனித்தனி மரங்கள் சேர்ந்து சோலையாவதைப் போல, தனித்தனி நபர்கள் சேர்ந்து ஓட்டளித்துத்தான் நாட்டை ஆள்பவனைத் தேர்ந்தெடுக்கிறார்கள். சோலை பயன்தருகிறது. ஆனால் ஆள்பவன் பயன் தருவதில்லை என்கிற வருத்தத்தை

**"வாக்குப் பெட்டியின் வாய்கள் பிணங்களின் வாய்கள்**
**வாக்குகள் ; வாய்க்கரிசி" (அப்துல் ரகுமான்., சுட்டுவிரல், ப.146)** என்று காட்சிப்படிமமாக அமைத்துள்ளார்.

**வாக்காளர் பட்டியல்**

வாக்காளர் பட்டியலை ஓட்டுக்கள் போடுவதற்கு அனுமதி அளிக்கக் கூடிய முன் அறிவிப்புப் பட்டியல் என்று கூறலாம். இந்தப் பட்டியல் சில நபர்களின் பெயர்கள் விடுபடுவதும், இறந்துபோனவர்களின் பெயர்கள் நீக்கப்படாமலும் இருக்கும். இறந்து போனவர்களின் ஓட்டுகளைக் கள்ள ஓட்டாக மாற்றிவிடுகிறார்கள் என்பதை

**"தேர்தல் வருகிறதல்லவா? செத்துப்போனவர்கள்**
**எல்லாம் எழுந்து வரவேண்டியது தானே!" (அப்துல் ரகுமான்., சுட்டுவிரல், ப.62)**

என்கிறார்.

**மக்களின் வலிநிலை**

இந்தியக்குடியுரிமை பெற்ற எந்தஒரு குடிமகனும் பதினெட்டு வயது நிரம்பிவிட்டால் வாக்களிக்கலாம். இவர்களை வாக்காளர் என்று அழைப்பர். அவ்வாறு வாக்களிப்பவர்கள் சிந்தித்து ஓட்டளிக்காமல் போலி அரசியல்வாதிகள் கொடுக்கும் பணத்திற்காகவும், மதுவிற்காகவும் வலையில் விழுவதைப் பார்த்த கவிஞர்,

**"பாட்டில் மயங்கிப் ; பசியை மறந்துவிட்ட**
**அசட்டுக் குழந்தையே" (அப்துல் ரகுமான்., சுட்டுவிரல், ப.138)**

என்கிறார். கவிஞர் வாக்காளர் பட்டியலை முட்டாள்கள் பட்டியல் என்றும் குறிப்பிடுகிறார். மேலும் அரசியல்வாதிகளில் நல்லவன், கெட்டவன் என்று பிரித்து அறிய முடியாத மக்களாய் இருப்பதை,

**"மிட்டாய் கொடுப்பவனையெல்லாம்**
**நம்பும் ; பேதைப் பிள்ளையே**
**உன்னைப்பிடித்தடைக்கும்**
**கோணிப்பைக்கும் ; ஏனைக்கும் ; உனக்கு**
**வித்தியாசம் தெரிவதில்லை ; நீ**
**எப்போது வயசுக்கு வரப்போகிறாய்?" (அப்துல் ரகுமான்., சுட்டுவிரல், ப.138)**

என்று மக்களை பக்குவமடையாதவர்கள் என்கிறார்.

**அரசியல் அரங்கேற்றம்**

அரசியல் என்பது ஓர் புனிதமான இடமாக இருந்து இன்று கூத்தாடுகின்ற அல்லது நடிக்கின்ற நடிகர்களின் இடமாக மாறிப்போனதை வருத்தத்தோடு பதிவு செய்கிறார்.

**"புறத்திணை சுயம்வர மண்டபத்தில் ∴ போலி நளன்களின் கூட்டம்**
**கையில் மாலையுடன் ∴ குருட்டுத்தமயந்தி" (அப்துல் ரகுமான்., பால்வீதி, ப.72)**

இதில் புறத்திணை மண்டபம் என்பதை அரசியலாகவும், போலி நலன்கள் என்பவர்களை அரசியல்வாதிகளாகவும், கையில் மாலையுடன் இருக்கும் குருடர்கள் தொண்டர்கள் அல்லது குடிமக்களாகவும் ஒருசேர அமைத்து அரங்கேற்றம் செய்கிறார்.

**அரசியல் அவலம்**

ஆறாவது அறிவு என்பது மனிதனுக்கு மட்டும்தான். அது விலங்குகளிடம் இருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுகிறது. இதை கவிஞர் அரசியல் கலையை மனிதன்தான் கண்டுபிடித்தான் அப்படி என்றால் ஆறாவது அறிவு வஞ்சக வலையா? என்று கேட்கும் கேள்வி சிந்திக்கத் தூண்டுகிறது. மேலும் அரசியல் என்பது மக்களின் குறைபாடுகளை கலந்து ஆலோசித்து களைவதற்காகவே ஏற்பட்டதாகும். ஆனால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற நபர்கள் மக்களுக்குக் கேடுகளை விளைவிக்கின்றனர்.

**"வரங்களே சாபங்கள் ஆகுமென்றால் இங்கே**
**தவங்கள் எதற்காக?" (அப்துல் ரகுமான்., பால்வீதி, ப.79)**

என்று படிமமாகக் காட்சிப்படுத்துகிறார். அரசியலைப் பொருத்தவரையில் தவம் செய்கின்ற மக்களுக்கு சாபமே கிடைக்கிறது. அப்படியானால் தவங்களாகிய அரசியல் எதற்காக? என்ற கேள்வியை முன்வைக்கிறார்.

**முடிவுரை**

அரசியல் என்பது நாட்டையும், நாட்டு மக்களையும், நன்முறையில் வழிநடத்த வேண்டும். அத்தகைய அரசியல் தனிமனிதனின் உரிமைகளுக்கும், கடமைகளுக்கும் ஒருசேரத் துணை நிற்க வேண்டும். ஆனால் இன்று அவ்வரசியல் சுரண்டப்படுகின்ற ஒரு பதவியாக மாறிவிட்டது. இதில் பொதுநலம் என்பது மறைந்து தன்னலங்காக்கும் அமைப்பாக மாறிவந்துள்ளது. நிறைவான, குறிப்பிட்டுச் சொல்லும்படி ஒரு செயலும் இதன்பாற் அமையாத விரக்தியில் கவிஞர் அதன் குறைகளைச் சுட்டியே கவிதைகளைப் படைத்துள்ளார். குறைகளைச் சொல்வதின் நோக்கம் தவறுகளைச் சரிசெய்து எதிர்காலங்களில் இத்தகைய அரசியலை ஒழித்து நல்லாட்சியை நல்லவர்கள் அமைக்க வழிவகுக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்தை கவிஞர் பார்வையில் பார்க்கமுடிகிறது. மக்கள் சலுகைகளை எதிர்பார்க்காமல் நாட்டின் வளர்ச்சியை எதிர்பார்த்து தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்பதையும் இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

**முதன்மை நூல்கள்**


- அப்துல் ரகுமான் - நேயர் விருப்பம், நேஷனல் பப்ளிசர்ஸ், 10வது பதிப்பு, சென்னை - 2003.
- அப்துல் ரகுமான் - சுட்டுவிரல், நேஷனல் பப்ளிசர்ஸ், 3வது பதிப்பு, சென்னை - 2003.
- அப்துல் ரகுமான் - பால்வீதி, நேஷனல் பப்ளிசர்ஸ், 19வது பதிப்பு, சென்னை – 2003.
- அப்துல் ரகுமான் - பித்தன், நேஷனல் பப்ளிசர்ஸ், 4வது பதிப்பு, சென்னை - 2003.


**துணைமை நூல்கள்**


1. தந்தைப் பெரியார்., - தந்தைப் பெரியார் பொன்மொழிகள், வ.உ.சி. நூலகம், சென்னை -2004.
2. மு. தமிழ்குடிமகன். - பத்தாண்டுத் தமிழ்க் கவிதைகள், அறிவொளி பதிப்பகம், மதுரை -1982.
3. ப. முருகன். - திருக்குறள் திறவுகோல், ரைன்போவ் பிரிண்டர்ஸ், சென்னை -1993.
4. வேதாத்திரி மகரிஷி - ஞானக் களஞ்சியம் -1, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு -1991.